# திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு

# திருவழிபாடு ஆண்டு - C

## *2022-04-10*

*(இன்றைய வாசகங்கள்:*

*இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம்: 50:4-7,*

*பதிலுரைப்பாடல். திபா. 22: 7-8, 16-19,22-23,*

*திருத்தூதர் பவுல் பிலிப்பியருக்கு எமுதிய திருமுகத்திலிருந்து வாசகம். 2: 6- 11.,*

*லூக்கா எமுதியபடி நம் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் திருப்பாடுகள்: 22: 14-23:56)*

*திருப்பலி முன்னுரை*

*குருத்தோலைகளைக் கையேந்தி "ஓசான்னா" என திருமகன் புகழ்பாடி 2000 ஆண்டுகளுக்குமுன் எருசலேம் வீதிகளில் கழுதைக் குட்டியின்மேல் இயேசு பவனிவர, எளிய மக்கள் அவரைப் புகழ்ந்து பாடி வந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வை இன்று கொண்டாடி இத் தூய வாரத்தைத் தொடங்கியிருக்கிறோம்.*

*கிறிஸ்துவுக்குரியவர்களே, நம் ஆண்டவர் இயேசுவின் பெயரால் திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு திருவழிபாட்டு நிகழ்வுகளுக்கு உங்களை வரவேற்கின்றோம். கழுதைக்குட்டி மீது தொடங்கும் கிறிஸ்துவின் பயணம் சிலுவை மரத்தில் முடிவடைந்ததை இன்று நாம் தியானிக்க இருக்கிறோம். 'ஆண்டவர் பெயரால் வருகிறவர் போற்றப்பெறுக!' என்று ஆர்ப்பரித்து இயேசுவை அரசராய் வரவேற்ற அதே இஸ்ரயேல் மக்கள், 'அவனை சிலுவையில் அறையும்!' என்ற கூக் குரலால் அவரை மரணத்துக்கு தீர்ப்பிடுவதைக் காண்கிறோம். கிறிஸ்துவின் பாடுகளின் பயணத்தில் பங்கேற்று, நமது பாவங்களுக்காக மனம் வருந்த திருச்சபை நமக்கு அழைப்பு விடுக்கிறது. நம் மீது கொண்ட அன்பிற்காக தன்னையே சிலுவையில் பலியாக்கி, நற்கருணையில் உணவாக வழங்கும் இயேசுவின் அன்பை சுவைக்க நாம் அழைக்கப்படுகிறோம். கிறிஸ்துவின் அன்புக்கு பதிலன்பு செலுத்தும் உண்மையுள்ள சீடர்களாக வாழும் வரம் கேட்டு, இந்த திருவழிபாட்டு நிகழ்வுகளில் பங்கேற்போம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

***மனமாற்றம் தருபவராம் இறைவா,***

*உமது திருவுளத்தை நிறைவேற்றுவதற்காக சிலுவை மரணம் வரை கீழ்ப்படிந்த உம் திருமகனைப் பின்பற்றி வாழும் வரத்தை எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவருக்கும் வழங்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***அன்புத் தந்தையே எம் இறைவா!***

*உக்ரைன் ரஷ்யா போர் விரைவில் முடிவு பெறவும்; அமைதியான சூழல் ஏற்படவும், போரின் பாதிப்புக்கள் விரைவில் சீரடையவும், வன்முறைகள் முற்றுப்பெறவும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

***ஞானத்தின் உறைவிடமான எம் இறைவா!***

*போரினால் பலவித இழப்புக்களைச் சந்திக்கின்ற மக்களை ஒப்புக்கொடுக்கின்றோம். அன்பான மனிதர்களை, உடல் உறுப்புக்களை, உடமைகளை, நிம்மதியை, மன மகிழ்ச்சியை, வேலைகளை இன்னும் பலவற்றை இழந்து தவிப்போருக்கு ஆறுதலாகவும்; ஆதரவாகவும் நீரே இருக்க வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

***நல் ஆயனே! எம் இறைவா!***

*கருத்து வேறுபாடுகள் ஏற்படுகின்றபோது சண்டைகளை விடுத்து அமைதிப் பேச்சு வார்த்தைகளில் தீர்வு காணவும், மக்களின் அமைதியான வாழ்வையும், நலனையும் குறித்து அக்கறை கொள்ளவும், எங்கள் தலைவர்களை வழி நடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

***நிறைவு தருபவராம் இறைவா,***

*உம்மை குறித்த மனிதரின் தேடல், சிலுவையில் தன்னையே பலியாக ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவிலேயே நிறைவு பெறுகிறது என்பதை உலக மக்கள் அனைவரும் அறிந்து கொள்ள நீர் உதவ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***நிலைவாழ்வுத் தரும் ஊற்றாகிய எம் இறைவா!***

*கொரோனா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்ட உலக நாடுகளின் மக்களைக் கண்ணோக்கியருளும். அவர்கள் அனைவரும் விரைவில் குணமடையவும், இந்நோய் முற்றிலும் நீங்கிடவும், இத்தவக்காலத்தில் உம் மக்கள் அனைவரும் ஆலயம் சென்று, ஒன்றிணைந்துச் செபிக்கவும் தேவையான அருளை வழங்கிட இறைவா உம்மிடம் மன்றாடுகிறோம்...*

***இரக்கம் காட்டுபவராம் இறைவா,***

*எம்மை குணப்படுத்துவதற்காக காயப்பட்ட இயேசுவின் பாடுகள் வழியாக, எங்கள் உடல், உள்ள, ஆன்ம நோய்களை குணப்படுத்தி புது வாழ்வு அளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***மீட்பு வழங்குபவராம் இறைவா,***

*கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் வழியாக மனித குலத்துக்கு நீர் அளித்த மீட்பை சுவைத்து மகிழும் வரத்தை எம் நாட்டு மக்கள் அனைவருக்கும் வழங்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*